

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், அசநல்லிபாளையம் கிராமத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் ஜெயதுர்கா டெக்ஸ் பார்க் லிமிடெட் சிறிய அளவிலான ஜவுளி பூங்காவினை திறந்து வைத்து பார்வையிட்டனர். இதில் துணிநூல் துறை ஆணையர் இரா.லலிதா, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், திருப்பூர் மண்டல துணிநூல் துணை இயக்குநர் செ.தமிழ்செல்வி உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




கோவை வடக்கு மாவட்டம், ஆர்.எஸ்.புரம் பகுதிக் கழகம் சார்பில் கழக அரசின் 5 ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி தலைமையில் ஆர்.எஸ்.புரம் பகுதிப் பொறுப்பாளர், 72வது வார்டு மாமன்ற உறுப்பினர் கார்த்திக் கே.செல்வராஜ் வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர், மாநிலங்களவை குழுத்தலைவர் திருச்சி சிவா, கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் – முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி சிறப்புரையாற்றினர். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்.பி., 72 வது வட்டச் செயலாளர் வி.ஜெகதீசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில்

# கழகக் குடும்பத்தில் உயர்கல்வி பயிலும் 1243 வாரிசுகளுக்கு ரூ. 2 கோடியே 28 லட்சத்து 90 ஆயிரம்!

## கலைஞர் கல்வி உதவி தொகையை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், ஜன. 30 –

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கிளை, வார்டு கழக அவைத் தலைவர் துணைச் செயலாளர், பொருளாளர், ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், தொடர்ந்து மூன்று, இரண்டு உறுப்பினர் அட்டை உள்ளவர்கள் குடும்பத்தில் உயர்கல்வி பயிலும் 1243 வாரிசுகளுக்கு மாவட்டக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகையை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் நாமக்கல், சேந்தமங்கலம், ராசிபுரம் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளில் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் உள்ள கிளை, வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் BLA 2 நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கிளை, வார்டு கழக அவைத் தலைவர் துணைச் செயலாளர், பொருளாளர், ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், தொடர்ந்து மூன்று, இரண்டு உறுப்பினர் அட்டை உள்ள குடும்ப வாரிசுகளுக்கு கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சரு மான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் வழிகாட்டுதலுடன் மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்பேற்றது அன்று முதல் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை என்ற பெயரில் வழங்கி வருகிறார்.

அதன்படி நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், இனமான பேராசிரியர் கூட்ட அரங்கில் நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, நாமக்கல் தெற்கு ஆகிய நகரங்களில் உள்ள கழகத்தின் உயிர்நாடியாக விளங்கும் ஒன்றிய, நகர, பேரூர் கழகத்தில் தற்போது பொறுப்பில் உள்ள அவைத் தலைவர், துணைச் செயலாளர், பொருளாளர் மற்றும் ஒன்றிய அணியின் அமைப்பாளர், துணை அமைப்பாளர், தலைவர் மற்றும் தொடர்ந்து கழகத்தில் இரண்டு மற்றும் இரண்டு உறுப்பினர் அட்டைக்கு குறையாமல் உள்ளவர்களின் குடும்பத்தில் உயர்கல்வி பயிலும் வாரிசுகளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மாவட்ட அவைத்தலைவர் சி.மணி மாறன், நாமக்கல் கிழக்கு நகரச் செயலாளரும், மாநகராட்சி துணை மேயருமான செ.பூபதி, மேற்கு நகர செயலாளர் அ.சிவக்குமார், தெற்கு நகர செயலாளர் ராணா ஆனந்த், நாமக்கல் ஒன்றியச் செயலாளர் வி.கே.பழனிவேல், மாநகராட்சி மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கி, முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித் தொகையை வழங்கி பேசும் போது,

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் நாமக்கல், சேந்தமங்கலம், ராசிபுரம் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளில் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் உயிர்நாடியாக விளங்கும் அவைத்தலைவர், துணைச் செயலாளர், பொருளாளர் மற்றும் ஒன்றிய சார்பு அணியின் அமைப்பாளர், துணை அமைப்பாளர், தலைவர் மற்றும் தொடர்ந்து கழகத்தில் மூன்று மற்றும் இரண்டு உறுப்பினர் அட்டைக்கு குறையாமல் உள்ளவர்களின் குடும்பத்தில் உயர்கல்வி பயிலும் வாரிசுகளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித் தொகை வழங்கி பேசும்போது,

கடந்த 2022 ஆம் ஆண்டில் 88 பேருக்கும் 2023 ஆம் ஆண்டில் 70 பேருக்கும், 2024 ஆண்டில் 83 பேருக்கும் என 241 பேருக்கு ரூ. 1 கோடியே 84 லட்சத்து 55 ஆயிரம் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கடந்த 2025 ஆம் ஆண்டு 514 பேருக்கு ரூ. 2 கோடியே 3 லட்சம் என மொத்தம் 755 பேருக்கு ரூ. 3 கோடியே 87 லட்சத்து 55 ஆயிரம் முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து 0101 2025 முதல் 07122025 வரை நாமக்கல் கிழக்கு நகரத்தில் தொழிற்கல்வி பயில 8 பேருக்கும் பட்டப்படிப்பு பயில 3 பேருக்கும், நாமக்கல் மேற்கு நகரத்தில் தொழிற்கல்வி பயில 17 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 8 பேருக்கும், நாமக்கல் தெற்கு நகரத்தில் தொழிற்கல்வி பயில 9 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 13 பேருக்கும், நாமக்கல் ஒன்றியத்தில் தொழிற் கல்வி பயில 31 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 18 பேருக்கும்,

புதுச்சத்திரம் வடக்கு ஒன்றியத்தில் தொழிற்கல்வி பயில 54 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 50 பேருக்கும், புதுச்சத்திரம் தெற்கு ஒன்றியத்தில் தொழிற்கல்வி பயில 40 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 29 பேருக்கும், மோகனூர் ஒன்றியத்தில் தொழிற்கல்வி பயில 17 பேருக்கும், பட்டப் படிப்பு பயலே 29 பேருக்கும், மோகனூர் பேரூரில் தொழிற்கல்வி பயில 6 பேருக்கும், பட்டப்படிப்பு பயில 10 பேருக்கும்,

கொல்லிமலை ஒன்றியத்தில் தொழிற்கல்வி பயில 9 பேருக்கும் பட்டப் படிப்பு பயில 36 பேருக்கும், எருமப்பட்டி ஒன்றியத்தில் தொழிற் கல்வி பயில 96 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 103 பேருக்கும், எருமப்பட்டி பேரூரில் தொழிற்கல்வி பயில 5 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 6 பேருக்கும், சேந்தமங்கலம் ஒன்றியத்தில் தொழிற்கல்வி பயில 53 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 51 பேருக்கும், சேந்தமங்கலம் பேரூரில் தொழிற்கல்வி பயில 16 பேருக்கும், பட்டப்படிப்பு பயில 17 பேருக்கும்,

நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் தொழிற்கல்வி பயில 41 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 43 பேருக்கும், நாமகிரிப்பேட்டை பேரூரில் தொழிற்கல்வி பயில 28 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 26 பேருக்கும், காளப்பநாயக்கன்பட்டி பேரூரில் தொழிற்கல்வி பயில 12 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 10 பேருக்கும், ராசிபுரம் நகரத்தில் தொழிற்கல்வி பயில 13 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 19 பேருக்கும், வெண்ணந்தூர் ஒன்றியத்தில் தொழிற்கல்வி பயில 36 பேருக்கும், பட்டப்படிப்பு பயில 28 பேருக்கும், வெண்ணந்தூர் பேரூரில் தொழிற் கல்வி பயில 20 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 20 பேருக்கும்,

ராசிபுரம் ஒன்றியத்தில் தொழிற்கல்வி பயில 56 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 24 பேருக்கும், பிள்ளாநல்லூர் பேரூரில் தொழிற்கல்வி பயில 22 பேருக்கும்,பட்டப் படிப்பு பயில 11 பேருக்கும், சிராப்பள்ளி பேரூரில் தொழிற் கல்வி பயில 26 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 21 பேருக்கும், அத்தனூர் பேரூரில் தொழிற்கல்வி பயில 22 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 9 பேருக்கும், பட்டணம் பேரூரில் தொழிற்கல்வி பயில 5 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 6 பேருக்கும், புதுப்பட்டி பேரூரில் தொழிற்கல்வி பயில 7 பேருக்கும், பட்டப் படிப்பு பயில 4 பேருக்கும் என மொத்தம் 1243 பேருக்கு ரூ. ஓகே 2 கோடி 28 லட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பி.இராமசுவாமி, கேபி.ஜெகநாதன்,, அ. அசோக்குமார், வி.கே.பழனிவேல், ஆர்.எம்.துரைசாமி, பெ.நவலடி, பாலு (எ) பி.பாலசுப்ரமணியம், எம். பி.கௌதம், இரா.ஜெயப்பிரகாஷ், எஸ்.செந்தில் முருகன்,

பேரூர்க் கழகச் செயலாளர்கள் கே.அன்பழகன், பொன்.நல்ல தம்பி, செல்லவேல் (எ) சி.செல்லப்பன், ஆர்.எஸ்.எஸ்.ராஜேஷ், என். தனபால், பி.ஜெயகுமார், என்.செல்வராஜ், கே.கண்ணன், பழனியாண்டி, அ.சுப்ரமணியம், முருகேசன் மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அன்னியூர் சிவா.எம்.எல்.ஏ. – நடிகர் போஸ்வெங்கட் – சேர்க்காடு கென்னடி சிறப்புரை! பெரம்பலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில்

# மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், ஜன. 30 -

பெரம்பலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் புதிய பேருந்து நிலையத்தில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல் தலைமையில், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கிருஷ்ணா வரவேற்புரையில், மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா.எம்.எல்.ஏ. கலை இலக்கிய பேரவை மாநில துணைத் தலைவர் நடிகர் போஸ்வெங்கட் கொள்கை பரப்பு துணைச் செயலாளர் சேர்க்காடு கென்னடி, எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ., கழக இளம் பேச்சாளர் நா. காருண்யா ஆகியோர் கலந்து கொண்டு மொழிப்போர் தியாகிகள் பற்றி எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்கள்.

இதில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன் குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக் குழு உறுப்பினர்கள் கி. முகுந்தன், பட்டுச் செல்வி ராஜேந்திரன், செ.அண்ணாதுரை, டி.கே.இராமச்சந்திரன், ஆர்.முருகேசன்,

மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட கழக பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, ம.இராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி. இராஜேந்திரன், ஒன்றியப் பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், அழகு.நீலமேகம், கழக செயலாளர்கள் மு. வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர், ஏ.எஸ்.ஜாகிர்உசேன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், டி.ஆர். சிவசங்கர், ஆர்.அருண், மா.பிரபாகரன்,

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் கவிஞர்.முத்தரசன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்கராசு, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆர்.குமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சி.காட்டு ராசா, மாவட்ட சிறுபான்மையினர் நல அணி அமைப்பாளர் பாரி(எ)அப்துல் பாரூக், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட தெண்டரணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர். வேணுகோபால், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் கே. எம்.ஏ.சுந்தர்ராஜ், தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை மாவட்ட செயலாளர் ஆர்.ரெங்கசாமி, தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை மாவட்ட தலைவர் கே. கே.எம்.குமார், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.இரமேஷ், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் வி.சி.ரவி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் காடூர்.கவியரசு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா, மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ஏ.எம்.கே.கரிகாலன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ.கார்மேகம், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் அ.ரசூல் அகமது, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் நெ.அருண்குமார், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் கே.ஜி.மாரிக்கண்ணன், தலைமை கழக பேச்சாளர்கள் எசனை ஆறுமுகம், மு. விஜயரத்தினம், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ம.தமிழ் வேந்தன், பா.ரினோ பாஸ்டின், இராகவி ரவிக்குமார் உள்ளிட்ட 5 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் அ.இளையராஜா நன்றியுரையாற்றினார்.





கோவை வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காரமடை டீச்சர்ஸ் குடியிருப்பு பகுதியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம் ஏற்பாட்டில் 1,000க்கும் மேற்பட்ட பெண்கள் கருப்பு சிவப்பு உடை அணிந்து கலந்து கொண்ட சமத்துவ பொங்கல் விழா மற்றும் கோலப்போட்டி நடைபெற்றது. இதில் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ரதி மனோகரன், நகரச் செயலாளர் குரு பிரசாந்த், மேட்டுப்பாளையம் வடக்கு நகரப் பொறுப்பாளர் அசரப், தெற்கு ஒன்றியப் பொறுப்பாளர் நாயனூர் பிரதீப், முனுசாமி, உஷா வெங்கடேஷ், பிரஸ் சிவகுமார், உதயகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருச்சி மத்திய மாவட்டம்

## திருச்சி மேற்கு மாநகரம் திருவரங்கம் கிழக்கு, திருவரங்கம் மேற்கு ஆகிய பகுதிகளில் அடங்கியுள்ள வட்டங்கள் மாற்றியமைப்பு!

### தலைமைக் கழகம் அறிவிப்பு

கடந்த 13.1.2026 அன்று தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட திருச்சி மத்திய மாவட்டம், திருச்சி மேற்கு மாநகரத்திற்குட்பட்ட வட்டங்கள் பிரிப்பு அறிக்கையில் அறிவிக்கப்பட்ட **திருவரங்கம் கிழக்கு , திருவரங்கம் மேற்கு** ஆகிய பகுதிகளில் அடங்கியுள்ள வட்டங்கள் மாற்றியமைக்கப்படுகிறது.

அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வட்டங்கள் அடங்கியுள்ள பகுதிகளில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள் மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருவரங்கம் கிழக்கு பகுதி**
**(2, 2அ, 4, 4அ ஆகிய 4 வட்டங்கள்)**

**பகுதி பொறுப்பாளர் : என். ராம்குமார்** , ஜி43/1, கோரல் பிளாக், விக்னேஷ்வரா,அப்பார்ட்மெண்ட்,சீனிவாசநகர்,திருவானைக்கோவில், திருச்சி

**பகுதி பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :**

1. பி.ஜிம்மு, கொள்ளிடம் ரோடு, வடக்கு வாசல், திருவரங்கம்
2. பெ.விஸ்வநாதன், 127, சாத்தார வீதி, திருவரங்கம்
3. ஆர்ட்டிஸ்ட் ஏ.காமராஜ், கோகுலே தெரு, திருவரங்கம்
4. கு. சுவாதி, நந்தினி நகர், மேலூர் ரோடு, திருவரங்கம்
5. சு.குணசேகரன், வ.உ.சி.தெரு, திருவரங்கம்.
6. ஜி. சம்பத், வ.உ.சி.தெரு, மேலூர், திருவரங்கம்.
7. பெ.லெட்சுமணன், திருவள்ளுவர் வீதி, திருவரங்கம்
8. எஸ். பழனிச்சாமி, நெல்சன் ரோடு, திருவானைக்கோவில்
9. க.பஞ்சநாதன்,தெப்பக்குளத்தெருமேற்கு, திருவானைக்கோவில்
10. ப. வீரமுத்து, காந்தி ரோடு, நெல்சன் ரோடு, திருவானைக்கோவில்.

**திருவரங்கம் மேற்கு பகுதி**
**(1, 1அ, 3, 3அ ஆகிய 4 வட்டங்கள்)**

**பகுதி பொறுப்பாளர் : எம்.ஏ.எஸ்.மணி**, 83/84, தாமோதர கிருஷ்ணன் கோவில் தெரு, கீழவாசல், திருவானைக்கோவில், திருச்சி.

**பகுதி பொறுப்புக்குழு உறுப்பினர்கள் :**

1. பாஸ்போர்ட் ஏ.ஶ்ரீதர், அருள்முருகன் கார்டன், திருவரங்கம்
2. எம்.ராமதுரை, தெப்பள்குளம் முதல் தெரு,திருவரங்கம்
3. என்.ஏ.நல்லாண்டவர், சக்தி மாரியய்மமன் கோவில் தெரு.
4. கா. லட்சுமிதேவி, கீழத் தெரு, மேலூர், திருவரங்கம்.
5. மு.நேருஜி, கீழஅடையவளஞ்சான் தெரு, திருவரங்கம்.
6. சே. ரமேஷ், ரயில்வே ஸ்டேஷன் ரோடு, திருவரங்கம்.
7. சு. சுரேஷ், சக்தி மாரியம்மன் கோவில் தெரு, கீழவாசல், திருவரங்கம்
8. த. ராமகிருஷ்ணன், ஜான்சி நகர், அம்மா மண்டபம், திருவரங்கம்.
9. வீ. கணேசன், வடக்கு தெரு,மேலூர், திருவரங்கம்.
10. கோ. பிரகாஷ் கீழஅடையவளஞ்சான் தெரு, திருவரங்கம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் : 28.01.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**குடந்தை பத்மநாபன்**
**சனவரி 30 (1989)**



**குடந்தை வட்டக் கழகமாக இருந்தபோது முதல் வட்டச் செயலாளராகவும், அடுத்து குடந்தையின் முதல் நகரக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**1962ஆம் ஆண்டு விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டுகாலம் சிறையிலிருந்தவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.